## அத்தியாயம் 29

லக்கேஜை தள்ளிக் கொண்டு ஹாலுக்கு வந்த கீதாவை பார்த்ததும் ஓடி வந்து அவள் கையை பிடித்து கொண்டான் ஜேசி.

" மாம்! ப்ளீஸ், போகாதிங்க... நாங்கல்லாம் இருக்கோம்ல! நாங்க உங்களை பாத்துக்க மாட்டோமா! எதுக்கு எங்களையும் பனிஷ் பண்றீங்க??" என்று தழுதழுத்த குரலில் கூற அவனின் சிகையை பாசத்துடன் கோதி சிரித்தாள் கீதா.

" நான் பனிஷ் பண்ணல ஜேசி! எனக்கு கொஞ்சம் தனிமை தேவைப்படுது! அதுக்காக தான் நான் போறேன்"

" அப்போ அட்ரஸ் குடுக்க வேண்டியது தானே! உனக்கே தெரியும், இன்னிக்கு நீ இருக்கிற நெலமைல ஒரு காலத்துல நான் இருந்தேன், அப்போ நீ எனக்கு என்ன அட்வைஸ் பண்ணுன மாம்?? நம்ம மனசுக்கு பிடிச்சவங்க கூட இருந்தா எவ்ளோ பெரிய ப்ராப்ளமும் தூசி மாதிரி தோனும், மனசும் அமைதியா ஆகிடும்னு சொல்லிட்டு இப்போ நீயே எங்கள விட்டுட்டு போனா என்ன அர்த்தம் மாம்??"

" ஜேசி! அதுவும் இதுவும் ஒன்னு இல்ல. பிரச்சனைகள் மாற மாற அதுக்கான சொல்யூசனும் மாற தான் செய்யும். உனக்கு இது புரிய இன்னும் நாளாகும்" என்று சொல்லி விட்டு அனைவரிடமும் விடை பெற்றவள் டாக்சிக்கு கால் செய்ய போனாள்.

போனை எடுத்த கையை யாரோ பிடிக்க திரும்பி பார்த்தவள் அங்கே உறங்காத விழிகளுடன் நின்ற வருணை கண்டு சிலையானாள். பின்னர் அவனுடைய கையை விலக்க முயற்சிக்க வருணின் பிடி இன்னும் இறுகியது.

" வாட் இஸ் திஸ் வருண்?? லீவ் மை ஹேண்ட். எனக்கு ஃப்ளைட்டுக்கு டைம் ஆகுது. டாக்ஸிக்கு கால் பண்ணனும்"

" அதுக்கு அவசியம் இல்ல. பிகாஸ் நீ எங்கயும் போக போறது இல்ல. நீ இங்க தான் இருக்க போற அதுவும் எங்க எல்லார் கூடவும்"

" இனாஃப் வருண்... இப்போ எந்த டிராமாவும் தேவையில்ல... "

" டிராமா??" என்று சொல்லி விட்டு கவலை தோய்ந்த முகத்துடன் சிரித்தவன் " கீத்து...என்னால உன்னை அளவுக்கு அதிகமா காதலிக்க முடியும்... உன் மேல கோவமும் பட முடியும்...இவ்ளோ ஏன் உன்னை வெறுக்க கூட முடியும்... பட் என்னால என்னிக்குமே உன்னை மறக்க முடியாது..உன்னை விட்டு பிரிஞ்சிருந்த இந்த ஒரு வருஷத்துல நான் எவ்ளோவோ ட்ரை பண்ணியும் உன்னோட எந்த நினைவுகளையும் என்னால அழிக்க முடியல" என்று அவளையே பார்த்து கொண்டு சொல்ல கீதா அமைதியாக இருந்தாள்.

தன் கையில் வைத்திருந்த டைரிகளை காட்டியவன் " உயிரில்லாத இந்த டைரி கிட்ட சொன்ன விஷயத்தை என் கிட்ட சொல்லிருந்தா நான் எவ்ளோ சந்தோசப்பட்டிருப்பேன் தெரியுமா?? இந்த உலகத்துலயே பெஸ்டான ஃபீலிங் என்ன தெரியுமா?? நாம லவ் பண்ணுறவங்க நம்ம மேல வச்சிருக்கிற லவ்வ நம்ம உணருற அந்த தருணம் தான்.... இத வாசிக்கிறப்போ அதை நான் ஃபீல் பண்ணேன்..... என்னோட கீத்து என்னை இவ்ளோ லவ் பண்ணுறாளானு.... இவ்ளோவும் தெரிஞ்ச பிறகு உன்னை தூரமா அனுப்ப நான் என்ன முட்டாளா?? ஐ வோண்ட் அலோ யூ டு லீவ்" என்று உணர்ச்சிபூர்வமாக கூறியதை கேட்டு கீதா பெருமூச்சுடன் அவனை பார்த்தாள்.

பின்னர் " சோ இந்த டைரி படிச்ச பிறகு தான் நான் உன்னை எவ்ளோ லவ் பண்ணேனு உனக்கு புரிஞ்சுது ! அப்பிடி தானே.... அப்போ அதை படிக்காமலே இருந்திருந்தா இந்த ஜென்மத்துல என்னோட லவ்வ நீ நம்பிருக்க மாட்டல்ல.... இந்த உலகத்துல பெஸ்டான ஃபீலிங் பத்தி எனக்கு தெரியாது... பட் ரொம்ப மோசமான ஃபீலிங் என்ன தெரியுமா?? யாரை நம்ம ரொம்ப காதலிக்கிறோமோ அவங்களே நம்ம காதலை புரிஞ்சிக்காம நம்மளை சந்தேகப்படுறது...." என்று கூறியவளின் வார்த்தையில் இருந்த வலி அங்கிருந்த அனைவரின் நெஞ்சையும் பிளந்தது.

" அவங்க நம்மளை புரிஞ்சிக்காம பேசுற ஒவ்வொரு தடவையும் மனசு எவ்ளோ ரணமாகும் தெரியுமா?? இதையெல்லாம் கேட்டுட்டு எதுக்கு வாழனும்னு கூட தோனும்" என்று கூறவும் வருணுக்கு அவளை எவ்வாறு தேற்றுவது என்றே புரியவில்லை.

" இன்னிக்கு ஈஸியா நீ சொல்லுவ கீத்து உன்னோட லவ்வ நான் புரிஞ்சிகிட்டேனு.... பட் நாளைக்கே மறுபடியும் உனக்கு என்னோட லவ் மேல சந்தேகம் வரும்... ஒவ்வொரு தடவையும் ஏதாவது ஆதாரத்தை காமிச்சு

என்னோட லவ்வ நான் ப்ரூவ் பண்ணுறதுக்கு ஒரேயடியா நம்ம பிரியறது தான் பெட்டர் வருண்"

அவளின் கூற்றை மறுத்தவன் " நோ கீத்து! உனக்கே தெரியும்ல நான் ஒரு தடவை பண்ணுன தப்பை மறுபடியும் பண்ண மாட்டேனு! ப்ளீஸ் பிலீவ் மீ! " என்று அவளின் கையை பிடித்து கொண்டான்.

" நீ இவ்ளோ பேசுறது வேஸ்ட்! பிகாஸ் இப்போ உனக்காக என்னோட ஹார்ட்ல எந்த காதலும் இல்ல.... இது தான் உண்மை வருண்" என்று தீர்மானமாக கூறினாள் கீதா.

" ஓகே! நோ ப்ராப்ளம்... பட் எனக்கு கொஞ்சம் டை குடு... நான் உன்னை எவ்ளோ லவ் பண்றேனு உனக்கு புரிய வைக்கவும், என் மேல உனக்கு பழையபடி நம்பிக்கையும் காதலும் வரவும் எனக்கு ஒரே ஒரு சான்ஸ் குடு கீத்து...ப்ளீஸ்... ஒரு சான்ஸ்" என்று அவன் உருக்கமாக கேட்கவும் கீதாவால் மறுக்க இயலவில்லை.

தானாகவே அவளின் தலை சரியென்று அசையவும் வருணுக்கு போன உயிர் திரும்பி வந்தது. ஜேசி கண்ணீரை துடைத்து கொண்டே அவினாஷை கட்டி கொண்டான். அனைவருக்கும் அப்போது தான் நிம்மதியானது.

" இந்த தடவை நான் கண்டிப்பா உன்னை கஷ்டப்படுத்த மாட்டேன் கீத்து" என்று சொல்ல அவள் ஏதும் சொல்லாமல் யாருக்கோ கால் செய்து பிரயாணத்தை ரத்து செய்த விஷயத்தை கூறிவிட்டு தன் அறைக்குள் சென்றுவிட்டாள்.

அவளை தொடர்ந்து ரியா, யோகா, ஸ்ரீதேவி செல்ல அவர்களுடன் சேர்ந்து அனுவும் பிரியாவும் கூடவே சென்றனர். மகிழ்ச்சியுடன் நின்று கொண்டிருந்த வருணின் அருகில் வந்தனர் அவினாசும், விக்னேசும். அவனை கட்டிக் கொண்டவர்கள் அவனுக்கு நம்பிக்கையளிக்க ஜேசி கட்டை விரலை உயர்த்தி காண்பித்தான்.

அவர்களுடன் நின்ற ரேவதி வருணை பார்த்து " உனக்கு நியாபகம் இருக்கா வருண்?? நீ இதே மாதிரி முதல் தடவை கேட்டப்போ நாங்க எல்லாருமே உன் கூட தான் இருந்தோம்... அப்போ நீ குடுத்த எந்த ப்ராமிஷயும் நீ காப்பாத்தாம இல்ல ...பட் உன்னோட இன்செக்யூரிட்டி, கோவம் தான் உங்க ரெண்டு பேரையும் பிரிச்சுது.... இந்த தடவை அந்த மாதிரி எதுவும் நடக்காம

பாத்துக்கோ.... நம்ம மேல அன்பு வைக்கிறவங்க கெடைக்கிறது ரொம்ப கஷ்டம்.. அவங்களை ஒரு தடவை இழந்தா மறுபடியும் அவங்க நமக்கு கெடைக்க மாட்டாங்க.... அண்ணி ரொம்ப லவ் பண்ராங்க உன்னை.... கெடச்ச சான்ஸ மிஸ் பண்ணாம நடந்துக்கோ" என்று சொல்லிவிட்டு செல்ல முற்பட்டாள்.

அவளின் கையை பிடித்து நிறுத்திய வருண் " உனக்கும் என் மேல கோவம் தானே??? ஐயாம் சாரி ரேவா... " என்று சொல்ல அவனது தோளில் தட்டி விட்டு கீதாவிடம் சென்றாள். வருணுக்கு தன் மனதை விட்டு பெரிய பாரம் இறங்கிய உணர்வு...

---------------------------------------------------------------------------------------------------------------------

" ஜோசியர் என் கிட்ட உங்க ரெண்டு பேருக்கும் ஒரு வருஷம் கழிச்சு தான் கல்யாணம் பண்ணனும்னு சொன்னாரு.... இப்போ வருஷம் ரெண்டு ஆயிடுச்சு...இன்னும் நீங்க ரெண்டு பேரும் அமைதியாவே இருந்தா என்ன அர்த்தம்??? ஏதாச்சும் பேசுங்க ரெண்டு பேரும்...." என்று வீடியோ காலில் கோபமாக கேட்ட மீனாட்சியம்மாளை பரிதாபமாக பார்த்தனர் வருணும் , கீதாவும்..

" முகத்தை இப்பிடி பாவமா வச்சிகிட்டா நான் எதுவும் சொல்ல மாட்டேனு நெனச்சிங்களா?? கீதா உன்னோட ஃப்ரெண்ட்ஸ் ரியாவும் யோகாவும் அவங்க விரும்புன பையங்களையே கல்யாணம் பண்ணிட்டு இன்னிக்கு மணி மணியா பிள்ளைங்கள பெத்துக்கல?? நீங்க ரெண்டு பேரும் ஏன் இவ்ளோ பிடிவாதம் பண்றீங்க??"

" ஆச்சி அது ..." கீதா.

" நீ எதுவும் பேசாத கீத்துமா! நீ சொல்லு வருண்... இப்போ கல்யாணத்துக்கு சம்மதிக்க போறியா இல்லையா??"

" ஆச்சி! இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமே" என்று கீதாவை மனதில் வைத்து பதிலளித்தான் வருண்.

" எனக்கு அதுல்லாம் தெரியாது. இன்னிக்கு சாயங்காலம் நானும் வேணு அண்ணாவும் அபியை கூட்டிட்டு ஜோசியரை பாத்து நிச்சயதார்த்தத்துக்கு

நாள் குறிக்க போறோம்... வந்து உங்களுக்கு டேட் சொல்லுறோம்" என்று காலை கட் செய்தார்.

" நீ இப்பிடியே அமைதியா இருந்தா என்ன அர்த்தம் மிஸ்டர் ஜெர்மன்?? ஏதாச்சும் பண்ணு.."

" என்ன பண்ணனும்??? நான் உன் கிட்ட ப்ரபோஸ் பண்ணி ஒரு வருஷம் ஆகுது... நீ பதில் சொல்லாம இழுத்தடிச்சா இப்பிடி தான் எல்லாம் அவசர அவசரமா நடக்கும்"

" வாட்?? நான் இழுத்தடிக்கிறேனா?"

" ஆமாடி! பின்ன என்னாவாம்?? ஓகே சொல்லுறதுக்கு உனக்கு ஒரு வருஷம் கேக்குதா??"

" அஹான்! நான் இன்னும் உனக்கு ஓகே சொல்லல.... இப்போதைக்கு சொல்லுற ஐடியாவும் இல்ல"

" நோ ப்ராப்ளம்! நீ கல்யாணத்துக்கு அப்புறமா நல்லா யோசிச்சி ஓகே சொல்லு! "

" வாட்?? "

" என்ன வாத்து கோழினு?? ஒரு மனுஷன் ஓரளவுக்கு தான் பொறுமையா இருக்க முடியும்... இன்னிக்கு ஈவ்னிங் எங்கேஜ்மெண்ட் டேட் சொல்லுவாங்க... திருநெல்வேலி கௌம்ப ரெடியா இரு""

" போடா... இந்த மூஞ்சியல்லாம் என்னால கல்யாணம் பண்ணிக்க முடியாது"

" ஏய்! என்னோட மூஞ்சிக்கு என்னடி கொறச்சல்?"

" அய்யே! முதல்ல அங்க மூஞ்சி எங்க தெரியுது??? இந்த தாடிய ஃபர்ஸ்ட் ஷேவ் பண்ணு...பாக்கிறதுக்கு பூச்சாண்டி மாதிரி இருக்க"

" உனக்கு என்னோட அழகை பாத்து பொறாமைடி"

" பொறாமையோ இல்லையோ...நீ இப்பிடி தாடியோட மணமேடை ஏறுனா பாக்க நல்லாவா இருக்கும்?" என்று சலிப்புடன் கூறிய கீதாவை உற்றூ நோக்கியவன் பின் சந்தோச கூச்சலிட்டான்.

" கீத்து?? நீ அப்போ மேரேஜுக்கு சம்மதிச்சிட்டியா?" என்று கண்ணில் ஆர்வத்துடன் கேட்க கீதா கெத்தாக " போனா போகுதுனு ஆச்சிக்காக ஓகே சொல்றேன்..." என்று சொல்ல வருண் அவளின் மூக்கை பிடித்து திருகியவன் அவளை இறுக்கமாக அணைத்து கொண்டான்.

" சீரியசா சொல்லு....உன்னை யாரும் கல்யாணத்துக்கு கம்பெல் பண்ணாம நான் பாத்துக்கீறேன்"

அவனையே விழி எடுக்காமல் பார்த்தவள் " எனக்கு கழுத்து வலிக்கிது.. கொஞ்சம் என்னை தூக்குப்பா" என்று கையை விரித்து குழந்தை போல கூறவும் வருண் சிரிப்புடன் அவளை தூக்கி கொண்டான்.

" ம்ம்ம்.. இப்போ சொல்லவா??"

" சொல்லு"

" எனக்கு இந்த மிஸ்டர் ஜெர்மனை கல்யாணம் பண்ணிக்க மனப்பூர்வமா சம்மதம்... " என்று சொல்லவும் மகிழ்ச்சியில் அவள் முகமெங்கும் முத்தமழை பொழிந்தவன் " இன்னொரு தடவை ப்ளிஸ்" என்று செல்லமாக கேட்டான்.

" ஐ லவ் யூ வருண்" என்று சொல்லிவிட்டு வெட்கப்புன்னகை பூத்தாள் கீதா...

" இது போதும் கீத்து" என்று சொன்னவனை கேலியாக பார்த்தவள் " அப்போ கல்யாணம் வேண்டாமா? " என்று கேட்டு அவனை கலாய்த்தாள்.

அன்று மாலை மீனாட்சியம்மாள் வேணூ அபிராமியுடன் ஜோசியரை பார்த்து நிச்சயம், திருமணம் இரண்டுக்கும் நாள் குறித்துவிட்டு கீதாவிற்கும் வருணுக்கும் தெரிவிக்க இருவரும் சம்மதித்தனர். அன்றிலிருந்து இரண்டு மாதம் கழித்து ஒரு சுபதினத்தில் நண்பர்கள் சூழ உறவினர்கள் ஆசியுடன் வருண் கீதாவை திருமதி வருண் ஆக்கி கொண்டான்....

தாலி கட்டும் போது " மிஸ் கீதா கிருஷ்ணமூர்த்தி! நான் தாலி கட்ட போறதுல உங்களுக்கு பிரச்சனை எதுவும் இல்லையே" என்று வம்பிழுத்தவனை பார்த்து பல்லை கடித்தவள் " பிரச்சனைனு சொன்னா நீ தாலி கட்டாம போய்டுவியா?" என்று வார்த்தைகளை கடித்து துப்பினாள்.

" நோ பேபி"

" அப்போ என்னடா கேள்வி?? தாலிய கட்டுடா ! " என்று கீதா முறைத்து கொண்டே சொல்லவும் சிரிப்புடன் அவள் கழுத்தில் முடிச்சிட்டான்.

" கல்யாணம் அன்னிக்கு கூட என்னை டென்சனா பண்ணுற??இருடா உன்னை வச்சிக்கீறேன்" என்று கீதா கூற வருண் " அஹான், அதுக்கு தான் வெயிட்டிங் கீத்து" என்று கிண்டலாக கூற முகம் சிவந்தாள் கீதா.

" டாட் அப்றமா மொக்கையை போடுங்க! இப்போ பெரிவங்க கால்ல விழுந்து ஆசிர்வாதம் வாங்கனும்னு ஐயர் சொல்றது காதுல விழறதா " என்று ஜேசி கலாய்க்கவும் இருவரும் மணமேடையிலிருந்து இறங்கி பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டனர்... அவினாஷும் விக்னேசும் " டேய் மச்சி! இன்னிலே இருந்து நீ திரு. கீதாவா மாறிட்ட.... இத மனசுல வச்சிட்டு நடந்துக்கோ " என்று கலாய்த்தவாறே அவனை கட்டிக் கொண்டனர்.

ரியாவும் யோகாவும் அனுவுடன் சேர்ந்து வந்தவர்களை கவனித்து கொண்டிருந்ததால் குழந்தைகளை பார்த்து கொள்ளும் பொறுப்பை தங்கள் கணவன்மாரிடமே ஒப்படைத்து விட்டிருந்தனர்.

ஸ்ரீதேவியோ பிரியாவுடன் சேர்ந்து செல்ஃபி எடுத்து கொண்டே ஜேசியிடம் கலாய் வாங்கிக் கொண்டிருந்தாள். அபிராமி கீதாவுக்கு அறிவுரை மேல் அறிவுரையாக கூறி காதில் ரத்தம் வரச் செய்து கொண்டிருக்க அங்கே வந்த கண்ணன் " போதும்! என்னோட பொண்ணு உன்னை விட மெச்சூர்ட். அவ எல்லாத்தயும் ஹேண்டில் பண்ணிப்பா.... காலைல இருந்து உன் அட்வைஸ் மழையால அவளை நனைச்சது போதும்... போய் வினுவ கவனி...அங்க சின்ன குழந்தை கூட சண்டை போட்டுட்டு இருக்கான்" என்று அவரை அனுப்பி வைத்தார்.

வருண் தன்னுடைய கீதா இறுதியாக தனக்கு கிடைத்த மகிழ்ச்சியில் மிதந்தான் என்றால் கீதா தனக்கு ஒரு அழகான குடும்பம் கிடைத்ததில் திக்குமுக்காடி போனாள். மனதிற்குள்ளேயே தன்னை விட்டு நீங்கிய தன் குடும்பத்தினருக்கு நன்றி கூறவும் அவள் மறக்கவில்லை..